# இலங்கைப் பத்திரிகைப் பேரவை

## ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்

*2014, சனவரி 01 முதல் 2014, திசெம்பர் 31 வரை*

இலங்கைப் பத்திரிகைப் பேரவை,
155/15, காசல் வீதி,
கொழும்பு 08,
2014.03.10.

கௌரவ மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சர்,
மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு,
163, கிருலபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2014**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிக்கு இணங்க இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்;

1. 2014 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய பேரவையின் மீதான அறிக்கையும் பேரவையின் கொள்கை நிகழ்ச்சித்திட்டமும் ;

2. இக்காலப் பகுதிக்குரிய கணக்குகள் கூற்றின் பிரதி ஒன்று ;

3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,
(சனாதிபதி சட்டத்தரணி) டபிள்யூ. தயாரத்ன,
தலைவர்.

# இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

*1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினால் அமைக்கப்பட்ட இலங்கைப் பத்திரிகைப் பேரவை, மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சபையாகும்.*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவையை அமைத்ததன் நோக்கம் –*

*(1) இலங்கைப் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தல்;*

*(2) அச் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவதை தவிர்த்தல்;*

*(3) உண்மையான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையை பயன்படுத்துதல்.*

*01.01.2012 ஆந் திகதி தொடக்கம் இல. 155/15, காசல் வீதி, பொரளை, கொழும்பு 08 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.*

### *1. பேரவையின் அமைப்பு*

*நீதிமன்றத்தின் பகுதியாக அலுவல்களை மேற்கொள்ளும் இலங்கைப் பத்திரிகை பேரவையானது ஏழு (07) உறுப்பினர்களைக் கொண்டதாகும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் உறுப்பினர்கள் ஆறுபேர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்க தகவல் பணிப்பாளர் உத்தியோகப்பூர்வமாக (தற்போதைய தகவல் பணிப்பாளர்) நியமிக்கப்படுவார். ஒருவர் புதினப் பத்திரிகைத்துறையின் பிரதிநிதியாகவும் இருத்தல், மற்றும் ஒருவர் தொழிலிலீடுபட்டுள்ள பத்திரிகை எழுத்தாளரின் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ காலம் 03 ஆண்டுகளாகும்.*

*அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்படுள்ளது:-*

| *பதவி* | *பெயர்* | *நியமிக்கப்பட்ட திகதி* |
|---|---|---|
| *தவிசாளர்* | *சனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ தயாரத்ன அவர்கள்* | *2012.06.14* |
| *உறுப்பினர்* | *பேராசிரியர் ஆரியரத்ன அதுகல அவர்கள்* | *2010.06.04* |
| *உறுப்பினர்* | *பேராசிரியர் சுனந்த மகேந்திர அவர்கள்* | *2012.06.14* |
| *உறுப்பினர்* | *சட்டத்தரணி சந்தன பிரசாத் சூரிய ஆராச்சி அவர்கள்* | *2012.06.14* |
| *உறுப்பினர்* | *திரு. ஆரியநந்த தொபகாவத்த அவர்கள்* | *2012.06.14* |
| *உறுப்பினர்* | *திரு. பிரதீப் விஜேசுந்தர* | *2011.09.05* |
| *உறுப்பினர்* | *திரு. கருணாதாச சூரியஆரச்சி* | *2012.06.14* |

*மேலும் மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரினால் 2012.04.02 ஆந் திகதி தொடக்கம் திறைசேரியின் பிரதிநிதியாக திருமதி எம். கே. டீ. என். மாதம்பே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.*

*உறுப்பினரான திரு. பிரதீப் விஜேசுந்தர அவர்களின் உத்தியோகபூர்வ காலம் 05.09.2015 அன்றுடன் முடிவடைவதுடன் அவருக்கு பதிலாக திரு. எஸ். தில்லைநாதன் அவர்கள் 21.10.2014 அன்று நியமிக்கப்பட்டார்.*

### *2. பேரவையின் கூட்டங்கள்*

*தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தலைமைத்துவத்தில் 25 கூட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.*

### *3. முறைப்பாடுகள்*

*2014 ஆம் ஆண்டில் பத்திரிகைகளுக்கு எதிராக 61 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.*

*2012 மற்றும் 2013 வருடங்களில் 2014 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை முறையே 03 மற்றும் 41 ஆகும்.*

| | | |
|---|---|---|
| *2012 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள்* | - | *03* |
| *2013 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்* | - | *41* |
| *2014 ஆம் ஆண்டில் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டவை* | - | *55* |
| *2014 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள்* | - | *99* |

*முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற மூலகங்கள் பின்வருமாறு:-*

1. *தனிநபர்கள்*
2. *நிறுவன தலைவர்கள்*
3. *கலாநிதி*
4. *விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள்*

5. குருமார்கள்
6. ஆசிரியர்கள், ஆசிரியைகள்
7. தொழிற் சங்கங்கள்

55 முறைப்பாடுகளும் பின்வரும் உரிமையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகும்:

**உரிமையாளர்களின் பெயர்**

1. அசோசியேட்டட் நியுஸ் பேப்பஸ் ஒப் சிலோன் லிமிட்டெட்
2. உபாலி நியுஸ் பேப்பஸ் லிமிட்டெட்
3. “லங்கா” மலட் பப்லிகேஷன்
4. விஜய பத்திரிகை நிறுவனம்
5. சுமதி பத்திரிகை நிறுவனம்
6. ரன்திவ பத்திரிகை நிறுவனம்
7. ரிவிர பத்திரிகை நிறுவனம்
8. ராவய பப்லிஷர் கரண்டி நிறுவனம்
9. “ஈதலய” பத்திரிகை நிறுவனம்
10. லீடர் பப்லிகேஷன் நிறுவனம்
11. சிலோன் நியுஸ்பேப்பஸ் தனியார் நிறுவனம்

மீளாய்வின் கீழாண்டில் முறைப்பாடுகள் தொடர்பில் பேரவையின் தீர்மானம் கீழே தரப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவை | - 34 |
| பரஸ்பரம் இணங்கப்பட்டவை | - 18 |
| மேலும் நடவடிக்கை அவசியமற்றவை | - 23 |
| தள்ளுபடி செய்யப்பட்டவை | - 19 |
| கட்டளையிடப்பட்டவை | - 05 |
| | 99 |

“மேலும் நடவடிக்கை அவசியமற்றவை” என வர்க்கப்படுத்தப்பட்டவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

* முறைப்பாடானது பத்திரிகைப் பேரவையின் சட்டத்திற்கு அமைவானதல்ல;
* முறைப்பாட்டாளர்கள் தகுந்த நேரத்திற்கு அவசியமான பத்திரங்களை ஒப்படைக்காதமை;
* முறைப்பாடு விசாரணையின் போது முறைப்பாட்டாளர் சமுகமளிக்காமை;
* முறைப்பாடு தொடர்பிலான பத்திரிகை அப்போது பிரசுரிக்கப்படாமை;
* பத்திரிகை கட்டுரையினால் முறைப்பாட்டாளருக்கு தீங்கு ஏற்படாமை;
* முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டவை.

பத்திரிகை பதிவு செய்தல் :-

2014 ஆம் ஆண்டில் பேரவையில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை 226 ஆகும்.

**4. ஆளணியினர்**

தேசிய சம்பள பதவயணி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து புதிய படிவத்திற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு அமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் சேவையாளரின் எண்ணிக்கை 16 ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.ஏ. ஜகத்சிறி | - | கணக்காளர் |
| 2. | திரு. டீ. நிரோஷன | - | உதவி ஆணையாளர் (ஆய்வு) |
| 3. | திரு. டீ. எம். விஜேசிங்க | - | உதவி ஆணையாளர் (ஆய்வு) |
| 4. | திருமதி எச். எஸ். விஜேரத்ன | - | செய்தி ஆய்வாளர் |
| 5. | திருமதி இந்திராணி முருகேசு | - | மொழி பெயர்ப்பாளர் |
| 6. | திருமதி டீ. ஏ. அனோமா பிரியன்தி திலகரத்ன | - | கணினி இயக்குனர் |
| 7. | திருமதி டீ. என். நில்மினி பீரிஸ் | - | கணக்கு உதவியாளர் |
| 8. | திருமதி கே. ஜீ. என். எச். பதிரத்ன | - | முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர்) |
| 9. | செல்வி பீ. எம். பீ. கே. சிறிவர்தன | - | முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர்) |
| 10. | செல்வி என். ஜே. ஏ. ஜே. ஜீ. பெரேரா | - | முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர்) |
| 11. | திருமதி ஏ. எஸ். நிரஞ்சலா | - | முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர்) |
| 12. | திரு. கே. எல். சந்திரபால | - | சாரதி |

| | | | |
|---|---|---|---|
| 13. | திரு. ஜீ. பீ. கருணாதிலக்க | - | சாரதி |
| 14. | திரு. கே. ஜீ. எப். விஜேரத்ன | - | அலுவலக அலுவல்கள் உதவியாளர் |
| 15. | திரு. எச். ஏ. டீ. விஜேரத்ன | - | அலுவலக அலுவல்கள் உதவியாளர் |
| 16. | திரு. எச். எஸ். எஸ். ஆனந்த | - | தூதுவர் |

மக்கள் தொடர்பாடல் மற்றும் அமைச்சின் மேலதிக செயலாளரான (நிருவாகம்) திருமதி கே. டபிள்யு. பீ. என். அமரதுங்க அவர்கள் 09.05.2014 ஆந் திகதி தொடக்கம் பதில் பத்திரிகை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் உதவி ஆணையாளர் (ஆய்வு) பதவிக்கு நேர்முக பரீட்சையின் மூலம் திரு. டீ. நிரோஷ அவர்களை 24.01.2014 ஆந் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டதுடன் 01.09.2009 தொடக்கம் 31.08.2012 வரை இரண்டாம் நிலை அடிப்படையில் 3 வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் இக்காலவரையறை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**5. அமைச்சினால் இலங்கைப் பத்திரிகைப் பேரவைக்கு வழங்கப்பட்ட பணிப்புக்கள்**

மீளாய்வின் கீழான ஆண்டில் மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் எந்தவித பணிப்புக்களும் வழங்கப்படவில்லை.

**6. ஊடகவியலாளர்களை அறிவூட்டும் வேலைத்திட்டங்கள்**

(1) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாகாண தொடர்பாடல் மற்றும் பாடசாலைகளுக்கான தொடர்பாடல் கருத்தரங்குகள் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

| திகதி | பட்டறை | பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் / பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | இடம் |
|---|---|---|---|
| 18.01.2014 | குளியாப்பிட்டிய மாகாண ஊடகவியலாளர்களின் கருத்தரங்கு | 77 | "Sirimalie Earts Court Hotel" குளியாப்பிட்டிய |
| 11.02.2014 | குளியாப்பிட்டிய மாகாண ஊடகவியலாளர்களின் கருத்தரங்கு | 277 | குளியாப்பிட்டிய புனித ஜோஜ் வித்தியாலயம் |
| 29.05.2014 | இப்பாகமுவ பாடசாலை ஊடக கருத்தரங்கு | 70 | "Ceybank Holiday Homes (Pvt) Ltd" |
| 26.06.2014 | ஜயவர்தனபுர வலய பாடசாலை ஊடக கருத்தரங்கு | 208 | நுகேகொட சமுத்திராதேவி பெண்கள் பாடசாலை |
| 19.07.2014 | யாழ்ப்பாண பிரதேச ஊடகவியலாளர் கருத்தரங்கு | 36 | "District Secretariat Auditorium" |
| 27.09.2014 | பொலன்னறுவை மாகாண ஊடகவியலாளர் கருத்தரங்கு | 49 | "Hotel Mahanuge" |
| 14.10.2014 | ஒரண பாடசாலைக்கான ஊடக கருத்தரங்கு | 248 | "ஒரண தக்ஷிலா மத்திய வித்தியாலயம்" |

**"தேசத்திற்கு மகுடம்" வேலைத்திட்டம்**

21.02.2014 தொடக்கம் 01.03.2014 வரை குளியாப்பிட்டிய தக்ஷிலா பாடசாலை மைதானத்தில் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி நடாத்தப்பட்டது. அங்கு இலங்கைப் பேரவையில் கண்காட்சி கூடம் ஒன்று நடாத்தப்பட்டது.

**பத்திரிகை துறை மற்றும் தொடர்பாடல் கல்வி தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி - 2014**

ஊடகவியலாளர்கள் 33 பேரின் பங்களிப்புடன் அவர்களின் விடயம் தொடர்பிலான அறிவை மேம்படுத்தும் முகமாக 03.04.2014 அன்று பத்திரிகைத் துறை மற்றும் தொடர்பாடல் கல்வி என்னும் டிப்ளோமா பாடநெறியின் நான்காவது தொகுதி ஆரம்பிக்கப்பட்டது.

**வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் தொடர்பாடல் கலந்துரையாடல் - 2014**

இக்காலத்திற்கு அவசியமான வெளியீடுகளை இலக்காகக் கொண்டு தொடர்பாடல் நிகழ்ச்சி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிற்பகலில் நடைபெறும்.

**7. நிதி**

(i) 2014 ஆம் ஆண்டிற்காக இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் மீண்டுவரும் செலவாக 20,000,000 ரூபாவை மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் வருடாந்த மதிப்பீடு கிடைக்கப்பெற்றது. திறைசேரியிலிருந்து மீண்டுவரும் செலவாக 18,270,000 ரூபா மாதாந்த தவணையில் ஒதுக்கப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டின் மூலதன செலவாக ரூபா 1,000,000 ரூபா திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இத்தொகையில் 1,000,000 ரூபா பேரவையின் மூலதன செலவாகப் பெறப்பட்டது.

(iii) 2014 ஆம் நிதி ஆண்டில் அரசாங்க கொடைகளும் பத்திரிகைப் பதிவுக் கட்டணத்திற்குப் புறம்பாக ஏனைய கொள்ளல்கள் பேரவையின் நிதியில் வைப்பில் இடம்பெற்றவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா சதம் |
|---|---|
| மீளப்பெறும் வைப்புக்களும் ஏனைய அறவீடுகளும் | 511,797.31 |
| பிந்திய பதிவுக் கட்டண வருமானம் | 121,300.00 |
| | 633,097.31 |

(iv) **செயல் பெறுபேற்று அறிக்கை**

மீண்டுவரும் செலவாக அரச மானியம் உட்பட வருடத்தின் முழு வருமானம் 19,500,487.65 ரூபாவாக இருந்ததுடன் 20,991,454.55 ரூபா முழு செலவாகும். வருமானத்திலும் மேலதிக செலவு 1,490,966.90 ரூபா 2014 ஆம் ஆண்டில் வரவிலிடப்பட்டது.

(v) **பேரவையின் திரட்டிய நிதி**

2014 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பேரவையின் நிதியில் 3,625,336.30 ரூபா வரவிலிடப்பட்டது. வருட ஆரம்பத்தில் மூலதன தொகை 10,074,500.00 ரூபா ஆகும். வருடத்தின் மூலதன சொத்து 1,000,000 ஆகும். இவ்வாண்டில் நிலையான சொத்து 2,849,514 ரூபா ஆகும். முச்சக்கரவண்டி மீள் பெறுமதியிடப்பட்ட பின்னர் மாற்றப்பட்ட மூலதன தொகை 56,500.00 ரூபா ஆகும். வருடத்தில் வருமானத்திலும் மேலதிக செலவு 1,490,966.90 ரூபாவும் முன்னைய ஆண்டின் செம்மையாக்கல் (24,973.44) பேரவையின் நிதிக்கு மாற்றப்பட்டது. வருட இறுதியில் 10,882,198.36 வரவிலிடப்பட்டது.

பேரவையின் நிதியில் உபகாரத் தொகையாக 4,278,570 ரூபா செம்மைப்படுத்தப்பட்ட 174,908,36 ரூபா உட்பட நிலையான வருமானம் 8,999,117.98 ரூபாவும் உபகாரத்தொகை ஆய்வு ஆகியன வேறாக 3,139,173.89 ரூபா நிலையான சொத்து 3,197,384.65 வரவிலிடப்பட்ட ஏனைய வைப்புக்களாக எடுக்கப்படும்.

(vi) **பத்திரிகை பதிவு செய்தல்**

2014 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையும் பத்திரிகைப் பதிவுக் கட்டணம் 597,500 ரூபா கிடைக்கப்பெற்றது.

**8. நன்றி நவிலல்**

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற சரியான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல் மூலமாக வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஊழியர் குழாத்தின் கூட்டு ஒத்துழைப்பையும் பெற முடிந்ததையிட்டு நான் இன்புறுகிறேன்.

(சனாதிபதி சட்டத்தரணி) டபிள்யூ. தயாரத்ன,
தலைவர்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை,
155/15, காசல் வீதி,
பொரளை,
கொழும்பு 08,
2014, பெப்புருவரி 28.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

*நிதிச் செயற்பாட்டின் விபரம்*

*31ஆம் திகதி திசெம்பர் 2014 முடிவடைந்த ஆண்டிற்காக*

*(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது)*

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| **வருமானம்** | **குறிப்பு** | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |
| இலங்கை அரசின் பங்களிப்பு | 3 | 18,270,000.00 | 18,983,750.00 |
| புத்தக விற்பனைக் கமிஷன் | | - | - |
| பத்திரிகை பதிவுக் கட்டணங்கள் | | 597,500.00 | 147,200.00 |
| பிரதி பண்ணற் கட்டணம் | | 6,825.00 | 4,910.00 |
| பிந்திய கட்டணம் | | 121,300.00 | 89,200.00 |
| புத்தக விற்பனை | 4 | (109.66) | (1,363.74) |
| டிப்ளோமா பாடநெறி வருமானம் | | 353,000.00 | 210,000.00 |
| உத்தியோகத்தரின் கடன் வட்டி வரவு | | 57,359.17 | 62,765.65 |
| சேமிப்புக் கணக்கின் வட்டி | | 94,613.14 | 86,055.37 |
| நானாவித வரவுகள் | | - | 15,472.00 |
| **மொத்த வருமானம்** | | 19,500,487.65 | 19,597,989.28 |
| **செலவுகள்** | | | |
| வேதனம், கூலி உத்தியோகத்தர் சலுகைகள் | 5 | 9,106,096.84 | 7,661,575.22 |
| விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை | 6 | 1,035,844.39 | 935,562.13 |
| சொத்து தேய்மானம் மற்றும் உபகரணம் | | 1,427,923.77 | 1,459,343.00 |
| செலவு பயன்பாடு | 7 | 3,160,808.22 | 2,828,049.37 |
| ஏனைய செலவுகள் | 8 | 2,114,834.66 | 2,026,326.52 |
| மானியம் மற்றும் மாற்று கொடுப்பனவு | 9 | 4,145,946.67 | 6,474,069.45 |
| **மொத்த வருமானம்** | | 20,991,454.55 | 21,384,925.69 |
| **மிகை/(பற்றாக்குறை) வரிக்கு முன்னர்** | | (1,490.966.90) | (1,786,936.41) |
| **வருமான வரி செலவு** | | - | - |
| **வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை** | | (1,490,966.90) | (1,786,936.41) |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

*நிதி நிலைமை விபரம்*

*31ஆம் திகதி திசெம்பர் 2014 அன்று*

| சொத்துக்கள் | குறிப்பு | 2014<br>ரூ. சதம் | 2013<br>ரூ. சதம் |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| நிதி மற்றும் நிதி சமநிலை | 10 | 651,864.64 | 548,010.60 |
| பெறப்பட்ட வருமானம் | 11 | 23,962.71 | 81,143.25 |
| இறுதி இருப்புக்கள் | 12 | 552,229.77 | 613,630.73 |
| உற்சவ முற்பணக்கொடுப்பனவு | | 12,000.00 | 13,000.00 |
| உள்ளூர் கொள்வனவு முற்பணக்கொடுப்பனவு | | 10,000.00 | – |
| வைப்புக்கள்/முற்பணம் | 13 | 696,121.73 | 712,490.07 |
| கிடைக்கப்பெற்ற இடருதவிக் கடன் | 14 | 1,251,206.00 | 1,523,029.50 |
| | | **3,197,384.85** | **3,491,304.15** |
| **நடைமுறை சொத்து அல்லாத** | | | |
| சொத்து, தாவரம், உபகரணம் | 15 | 8,999,117.98 | 9,435,790.44 |
| முதலீடு சேமிப்புக் கணக்கு | 16 | 3,139,173.89 | 2,261,573.08 |
| | | **12,163,335.14** | **11,697,363.52** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **15,360,719.99** | **15,188,667.67** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| சில்லறை சென்மதியாளர் | | 2,000.00 | 2,000.00 |
| உள்ளப்படி செலவுகள் | 17 | 172,908.36 | 106,821.97 |
| | | **174,908.36** | **108,821.97** |
| **நடைமுறை பொறுப்புகள் அல்லாத** | | | |
| ஊழியர் நலன் | 18 | 4,278,570.00 | 3,738,207.00 |
| | | **4,278,570.00** | **3,738,207.00** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **4,453,478.36** | **3,847,028.97** |
| **தேறிய சொத்து** | | **10,907,241.63** | **11,341,638.70** |
| **தேறிய சொத்து** | | | |
| திறைசேரி மூலதன அறிமுகம் | | | |
| அரச திறைசேரி | | 2,849,514.00 | 10,074,500.00 |
| மூலதன ஒதுக்கல் | | 4,115,000.00 | 4,115,000.00 |
| மீள் மதிப்பு ஒதுக்கீடு | | 833,975.00 | 777,475.00 |
| | | (5,116,233.37 | (3,625,336.30) |
| | | **10,907,241.63** | **11,341,638.70** |

*05 தொடக்கம் 18 வரையிலான பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்பு இவ் நிதி நிலை விபரத்தின் முக்கிய பகுதியாகும்.*

*இந் நிதிநிலை விபரம் அரச பிரிவு தொடர்பில் அரச பொது கணக்கீட்டு கட்டளைகள் நிறுவனத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.*

............................................

*கணக்காளர்,*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவை,*

*இந் நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் சமர்பித்தல் ஆகிய சகல பொறுப்புக்களும் பணிப்பாளர் சபைக்கும் நிருவாக சபைக்கும் உரித்தாகும்.*

*நிருவாக சபைக்கு பதிலாக ஒப்பமிடல்,*

.......................................................

*பதில் பத்திரிகை ஆணையாளர்,*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவை.*

*தலைவர்,*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவை,*

*2013, பெப்புருவரி 28.*

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

*மாற்றப்பட்ட தேறிய சொத்து/தொகையின் அறிக்கை 31ஆம் திகதி திசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்காக*

(தொகை இலங்கை ரூபாவில் உள்ளது)

| | மூலதனப் பங்களிப்பு | மூலதன ஒதுக்கல் | மீள் மதிப்பு | திரட்டப்பட்ட மிகை/பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ***31 திசெம்பர் 2011 வரை மீதி*** | 10,450,000.00 | 3,415,000.00 | 777,475.00 | (1,759,206.90) | 12,883,268.10 |
| ***2012 ஆண்டிற்கான சொத்து/தொகை மாற்றம்*** | | | | | |
| திறைசேரியில் கிடைக்கப்பெற்ற நிதி | 682,000.00 | - | - | - | 682,000.00 |
| திறைசேரிக்கு மீள் கொடுப்பனவு | (757,500.00) | - | - | - | (757,500.00) |
| மூலதன ஒதுக்கீட்டுக்காக மாற்றப்பட்டவை | (700,000.00) | 700,000.00 | - | - | - |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | - | - | - | (79,647.99) | (79,647.99) |
| ***31 திசெம்பர் 2012 அன்று மீதி*** | 9,674,500.00 | 4,115,000.00 | 777,475.00 | (1,838,854.89) | 12,728,120.11 |
| ***2013 க்கான மாறுபாடு - தேறிய சொத்து/சமநிலை*** | | | | | |
| கணக்கீட்டுக் கொள்கை மாறுபாடு/திருத்தம் (குறிப்பு - அ) | - | - | - | 455.00 | 455.00 |
| திறைசேரியில் கிடைக்கப்பெற்ற நிதி | 400,000.00 | - | - | - | 400,000.00 |
| திறைசேரிக்கு மீள்கொடுப்பனவு | - | - | - | - | - |
| மூலதன ஒதுக்கீட்டுக்கான மாற்றம் | - | - | - | - | - |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | - | - | - | (1,786,936.41) | (1,786,936.41) |
| ***31 திசெம்பர் 2013 அன்று மீதி*** | 10,074,500.00 | 4,115,000.00 | 777,475.00 | (3,625,336.30) | 11,341,183.70 |
| ***கணக்கீட்டுக் கொள்கை மாறுபாடு/திருத்தம் (குறிப்பு - ஆ)*** | - | - | - | (24,973.44) | - |
| திறைசேரியில் கிடைக்கப்பெற்ற நிதி | 1,000,000.00 | - | - | 69.83 | 1,000,069.83 |
| திறைசேரிக்கு மீள்கொடுப்பனவு | - | - | - | - | - |
| மூலதன ஒதுக்கீட்டுக்கான மாற்றம் | - | - | 56,500.00 | - | 56,500.00 |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | - | - | - | (1,490,966.90) | (1,490,966.90) |
| ***31 திசெம்பர் 2014 அன்று மீதி*** | 11,074,500.00 | 4,115,000.00 | 833,975.00 | 5,116,233.37 | 10,907,241.63 |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

*காசு பாய்ச்சுக் கூற்று*

*31 திசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாற்றப்பட்ட தேறிய சொத்து/தொகையின் கூற்று*

**குறிப்பு - (அ) கணக்கீட்டுக் கொள்கை மாறுபாடு/திருத்தம்**

வருடத்தில் பேரவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செம்மையாக்கல்

| | |
|---|---|
| *2011 வருடத்திற்கான டிப்ளோமா பதிவு* | 15,000.00 |
| *இரத்து செய்யப்பட்ட காசோலைகள்* | 6,300.00 |
| *2011 வருடத்திற்கான பத்திரிகைப் பதிவு* | 7,400.00 |
| | **28,700.00** |
| *2011 இற்கான கணக்காய்வுக் கட்டணம்* | (17,153.00) |
| *எழுதி நீக்கப்பட்ட வாடகை வைப்பு* | (7,500.00) |
| *பத்திரிகை கொள்வனவு* | (1,590.00) |
| *ஆங்கில பாடநெறி கட்டண மீளளிப்பு* | (2,000.00) |
| *வங்கி வைப்புக்கான தவறு* | (2.00) |
| | 455.00 |

**குறிப்பு - (ஆ) கணக்கீட்டு கொள்கை மாறுபாடு/திருத்தம்**

வருடத்திற்கான பேரவை நிதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செம்மையாக்கல்

| | |
|---|---|
| *2013 வருடத்திற்கான டிப்ளோமா பாடநெறி* | 12,000.00 |
| *திருத்தம் தேறிய* | 48,433.33 |
| *பத்திரிகை விற்பனை* | 4,816.50 |
| *2013 வருடத்திற்கான பத்திரிகைப் பதிவு* | 40,250.00 |
| | 105,499.83 |
| *திருத்தல் - நிலையான சொத்து* | (44,180.00) |
| *டோனர் கொள்வனவு - 2012* | (34,800.00) |
| *திருத்தம் - புத்தக இருப்பு* | (15,250.00) |
| *திருத்தம் - தேறிய* | (1,200.00) |
| *2012, 2013 இற்கான டிப்ளோமா பாடநெறிக் கட்டண செம்மையாக்கல்* | (10,000.00) |
| | (69.83) |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**
*31ஆம் திகதி திசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்காக*
*காசு பாய்ச்சுக் கூற்று*

| *(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது)* | | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |
| **செயற்பாட்டு நடவடிக்கையின் காசுப் பாய்ச்சுக் கூற்று** | | | |
| வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை) | | (1,490,967) | (1,786,936) |
| **காசு அற்ற செயற்பாடுகளின் செம்மையாக்கல்** | | | |
| பெறுமானத் தேய்வு | | 1,427,924 | 1,459,343 |
| எழுதி நீக்கல் | | 35,490 | 2,691 |
| முன்னைய ஆண்டு செம்மையாக்கல் | | (24,973) | 455 |
| மூலதன ஒதுக்கீட்டிற்கான மாற்றல் | | 56,500 | - |
| பணிக்கொடை ஒதுக்கீடு | | 540,363 | 404,101 |
| அதிகரிப்பு/குறைப்பு இருப்புக்கள் | | 61,401 | 159,901 |
| அதிகரிப்பு/குறைப்பு உற்சவ முற்பணம் | | 1,000 | 0 |
| அதிகரிப்பு/குறைப்பு ஏனைய நடைமுறை சொத்து | | 57,180 | (5,632) |
| அதிகரிப்பு/குறைப்பு வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | | 16,368 | 1,015,172) |
| அதிகரிப்பு/குறைப்பு உள்ளூர் கொள்வனவுக்கான முற்பணம் | | (10,000) | - |
| அதிகரிப்பு/குறைப்பு பெறப்பட்ட இடருதவிக் கடன் | | 271,824 | (11,091) |
| அதிகரிப்பு/குறைப்பு சில்லறை வருமதியாளர் | | - | 1,500 |
| அதிகரிப்பு/குறைப்பு உள்ளபடி செலவுகள் | | 66,086 | -36,382 |
| **செயற்பாட்டு மூலதனத்தின் பயன்பாடு** | | **1,008,196** | **833,320** |
| **பணிக்கொடை** | | - | - |
| மூலதன பயன்பாட்டின் நிகர காசுப் பாய்ச்சு | | **1,008,196** | **833,320** |
| **முதலீட்டு செயற்பாட்டின் காசுப் பாய்ச்சு** | | | |
| நிலையான சொத்து கொள்வனவு | | (1,026,741) | (474,635) |
| நிதியின் முதலீடு | | (877,601) | (435,280) |
| **முதலீட்டு நிதியின் நிகர காசுப் பாய்ச்சு** | | **(1,904,342)** | **(909,915)** |
| **நிதி செயற்பாட்டின் காசுப் பாய்ச்சு** | | | |
| பணம் பெறுகை/மீளப் பெறுகையிலிருந்து திறைசேரிக்கு | | 1,000,000 | 400,000 |
| **நிகர காசுப் பாய்ச்சு /நிதிச்செயற்பாடுகளின் உள்பாய்ச்சு/வெளிப்பாய்ச்சு** | | **1,000,000** | **400,000** |
| **நிகர (அதிகரிப்பு/குறைவு) காசு, காசு சமநிலை** | | **103,854** | **373,405** |
| **வருட ஆரம்பத்தில் காசு, காசு சமநிலை** | | **548,011** | **174,606** |
| **வருட இறுதியில் காசு, காசு சமநிலை** | 10 | **651,865** | **548,011** |

*06 தொடக்கம் 13 வரையிலான கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக் கூற்றின் அவசியமான பகுதியாகும்.*

**1. உறைவிட மற்றும் சட்ட வடிவம்**

*1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் இலங்கைப் பத்திரிகைப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகமாகவும், சேவைக்கான முக்கிய இடமான இலங்கைப் பத்திரிகைப் பேரவை இல. 155/15 காசல் வீதி, பொரளை, கொழும்பு 08 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.*

**1.1 முக்கிய செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மையும்**

*இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை தேசிய அபிவிருத்திக்கான கலாசார அங்கமொன்றாகப் பிரபல்யப்படுத்துவதே இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் செயற்பாடாகும்.*

**1.2 அடிப்படையிலான தயாரிப்பு**

*நிதிக் கூற்றுகளை கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கணக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா வருடத்திற்கும் தொடர்ந்து உரித்தாகும்.*

**1.3 இணக்க அறிக்கை கூற்றுக்கள்**

*இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் நிதிக் கூற்றுக்கள் அனைத்தும் இலங்கையின் பொதுத்துறை கணக்கியல் தர நிலைகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்படுகின்றன.* (SLPSAS)

**1.4 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

*எதிர் காலத்தில் பேரவையை நடத்துவதற்கு போதியளவு வளங்கள் உள்ளது என்பதற்கு பணிப்பாளர் சபை திருப்தியடைந்துள்ளது.*

**1.1.2 ஒப்பீட்டு தகவல்கள்**

*கணக்கு கொள்கைகள் தொடர்ந்து கம்பனியுடன் ஒத்துச் செல்வதுடன் முன்னைய வருடங்களிலும் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.*

**1.1.3 கணிசநிலை மற்றும் திரட்டல்**

*ஒவ்வொரு மூலப் பொருட்களினதும் ஒத்தத் தன்மை நிதிக் கூற்றில் வேறாக பிரித்து காட்டப்பட்டுள்ளது. ஒத்த தன்மையற்றவை வேறாக பிரித்து காட்டப்பட்டுள்ளது.*

**1.1.4 கணக்கீட்டு கொள்கையிலான மாற்றம்**

*முன்னைய நிதி ஆண்டில் நிதிக் கொள்கைகள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.*

**2. குறிப்பிடத்தக்க சுருக்கமான கணக்கீட்டுக் கொள்கை**

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கொள்கைகள் நிதிக் கூற்றின் எல்லா காலத்திற்கும் ஏற்புடையதாகும்.*

**2.1 சொத்து, ஆலை மற்றும் உபகரணம்**

**2.1.1 அங்கீகாரமும் அளவீடுகளும்**

*எல்லா சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் நிதிக் கூற்றுகளில் கிரயத்தில் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டப் பட்ட பலவீனத்திற்கு எதிரான இழப்புகளின் குறைந்த பெறுமதியிலே பதிவு செய்யப்படும். மோட்டார் வாகனங்கள் அதன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் பதிவு செய்யப்படும். மற்றும் அதன் நியாயமான பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திலான பெறுமதியில் இருந்து அடுத்தடுத்து திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் பலவீனத்திற்கு எதிரான இழப்புக்கள் குறைக்கப்பட்டே பதிவு செய்யப்படும் சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கான மீள் கொண்டுசெல்லும் பெறுமதி இழப்புகளுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்படும். எவ்வாறெனின், சில நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களின் காரணமாக அவற்றின் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப் பெற முடியாது எனும் சூழ்நிலைகளில் ஆகும்.*

**2.1.2 தேய்மானம்**

*காணி தவிர்ந்த அனைத்து சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாடானது நேர் கோட்டு முறையில் கிரயம் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படும்.*

| சொத்துவர்க்கம் | ஆண்டு |
|---|---|
| மோட்டார் வாகனம் - (10%) | 10 |
| தளபாட இணைப்புக்கள் - (20%) | 05 |
| அலுவலக நலனோம்பு உபகரணம் - (20%) | 05 |
| நூலக நூல்கள் - (20%) | 05 |

*ஒவ்வொரு நிதி ஆண்டிலும் எஞ்சிய சொத்துக்களின் பெறுமானம் காட்டப்பட்டிருப்பதுடன் அவசியமாயின் செம்மையாக்கப்பட்டுள்ளது. கொள்வனவின்போது வருடத்தில் தேய்விரக்கம் வழங்கப்பட்டதுடன், விற்பனையின்போது தேய்விரக்கம் செய்யப்படவில்லை.*

**2.2 நிதி மற்றும் நிதிப் பயன்பாடு**

*கையிருப்பு ரொக்கம் நிதி மற்றும் நிதி சமநிலையில் தெளிவாக்கப்பட்டதுடன் வைப்புக்கள், குறைகளை கலைப்பு செய்தல்.*

**2.3 முதலீடுகள்**

சேமிப்பு கணக்கில் முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இம் முதலீடுகள் செலவுக் கணக்காக கொள்ளப்பட்டுள்ளது.

**2.4 இறுதி இருப்பு**

வெளியீடுகளும், காகிதாதியும் இறுதி இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதும், வெளியீடுகள் செலவுக் கணக்கில் காட்டப்படுவது அல்லது நிகர கணக்கு குறைக்கப்படும்.

**2.5 ஏனைய பெறுகைகள்**

ஏனைய பெறுகைகள் பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. டிப்ளோமா பெறுகைகள் தவிர்ந்த ஏனைய எல்லா பெறுகைகளும் உள்ளப்படி அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

**2.6 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

கடந்த விடயங்களில் கடமைப்பாடுகள் ஏற்படின் ஐந்தொகையில் பொறுப்புக்கள் காட்டப்படும். வெளிப்பாச்சின் விளைவுகளின் பொருளியல் நலன்கள் கடன்களில் எதிர்பார்க்கப்படுகிறது. வருமதியாள் செலுத்துகையில் நிபந்தனைகள் அல்லது ஒரு வருட ஐந்தொகையில் குறிப்பிடப்படும். ஒரு வருடத்தின் பின்னர் ஐந்தொகையில் செலுத்தப்படும் பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்கள் அற்றவை என்று ஏற்றுக்கொள்ளப்படும்.

கம்பனிக்கு சட்டபூர்வ அல்லது ஆக்கபூர்வ நிபந்தனைகள் ஐந்தொகையில் ஏற்பாடுகள் உணரப்பட்டு வெளிப்பாச்சி பொருளியல் நலன்கள் தேவைப்படின் செம்மையாக்கல் செய்யப்படும்.

**2.7 ஊழியர் நலன்கள்**

**2.7.1 தெளிவான பங்களிப்பு திட்டங்கள்**

பேரவையின் அனைவரும் ஊழியர் சேமலாப நிதியத்திலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் உறுப்பினர்களாக இருப்பதுடன் ஒவ்வொருவரதும் அடிப்படை சம்பளத்திற்கு பேரவை மூலம் 12% மற்றும் 13% வீதம் பங்களிப்பு செய்யப்படுகிறது.

**2.7.2 சலுகை திட்டங்கள்**

திட்ட வரவு முறையைப் பயன்படுத்தி ஓய்வுப் பணிக்கொடை சலுகையாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு பெறுகைகளும் இழப்புக்களும் வரவு செலவு கணக்கில் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

**2.8 நிதிசாதனை கூற்று**

**2.8.1 வருமான அங்கீகாரம்**

பொருளாதார சலுகையில் வருமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் கம்பனி வருமானத்திலும் கூட்டுறவு செலவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரமான நிலையில் வருமானம் கணிக்கப்பட்டுள்ளது.

**2.8.2 இலங்கை அரசின் பங்களிப்பு**

உள்ளப்படி அடிப்படையில் இலங்கை அரசின் பங்களிப்பு பெறப்பட்டது.

**2.8.3 வருமான வட்டி**

வட்டி முறையில் இலாபம் அல்லது நட்டம் வருமான வட்டியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**2.8.4 ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் அதிகரிப்பு அடிப்படையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

**2.8.5.1 செலவுகள்**

பேரவையின் சகல செலவுகளும் அன்றாட செலவுகளில் உள்ளடக்கப்படுவதுடன் மற்றும் சொத்து பராமரிப்பு, உபகரணங்கள் ஆகியன நிதி பெறுபேறுகளில் காட்டப்பட்டுள்ளது.

**2.8.5.2 செலவின் வகைகள்**

நிதி பெறுகைகள் கூற்றில் நியாயமான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதே ஆளுநர்களின் எண்ணமாகும்.

**2.9 நிதி பாய்ச்சுக் கூற்று**

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி நிதிப்பாய்ச்சுக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.10 அறிக்கை காலத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள்**

நிதிக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் அறிக்கையில் சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் ஏற்படலாம். தேவை யேற்படின் அறிக்கையிடும் காலத்தின் பின்னர் நிகழ்வுகள் ஏற்படின் செம்மையாக்கல் அல்லது வெளியிடல் ஆகியன நிதிக் கூற்றில் செய்யப்பட்டுள்ளது.

(எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது)

| | 2014 | 2013 |
|---|---|---|
| | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |

**குறிப்பு 3 - இலங்கை அரசின் பங்களிப்பு**

இலங்கை அரசிடமிருந்து பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு.

**குறிப்பு 4 - புத்தக விற்பனை**

| | 2014 | 2013 |
|---|---|---|
| புத்தக விற்பனை | 30,305.00 | 34,925.00 |
| குறைப்பு: கிடைக்கப்பெற்ற வருமான செம்மையாக்கல் | 7,505.00 | - |
| குறைப்பு: புத்தக விற்பனை விலை | 22,909.66 | 36,288.74 |
| | **(109.66)** | **(1,363.74)** |

**குறிப்பு 5 - வேதன, கூலி மற்றும் ஊழியர் அனுகூலம்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| வேதனமும் கூலியும் | 6,053,177.46 | 5,076,831.55 |
| ஊ.சே.நிதி - பங்களிப்பு | 728,608.82 | 578,066.00 |
| ஊ.சே.நிதி - பங்களிப்பு | 145,721.75 | 115,613.16 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 495,614.31 | 479,658.51 |
| உறுப்பினர் கட்டணம் | 552,000.00 | 504,000.00 |
| உபகாரத் தொகை | 540,363.00 | 404,101.00 |
| கணக்காய்வுக் குழுக்கான கட்டணம் | 60,000.00 | 28,000.00 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 530,611.50 | 475,305.00 |
| | **9,106,096.84** | **7,661,575.22** |

**குறிப்பு 6 - விநியோகமும் தேவைப்பொருளும்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| எழுது கருவிகள் | 150,338.19 | 96,502.63 |
| எரிபொருளும், மசக்கிடலும் | 604,491.10 | 551,325.00 |
| | 240,000.00 | 240,000.00 |
| அலுவலக தேவைகள் | 11,715.10 | 18,987.50 |
| மருந்து வழங்கல் | - | 255.00 |
| சீருடைகள் | 16,000.00 | 19,312.00 |
| தினப் பத்திரிகைகளும், வெளியீடுகளும் | 13,300.00 | 9,180.00 |
| | **1,035,844.39** | **935,562.13** |

**குறிப்பு 7 - பயன்பாட்டு செலவு**

| | 2014 | 2013 |
|---|---|---|
| தொலைபேசிக் கட்டணம் | 267,800.31 | 219,028.80 |
| அஞ்சல் கட்டணம் | 45,310,00 | 25,185.00 |
| மின்சாரம் | 248,912.75 | 232,695.26 |
| அலுவலக கட்டட வாடகை | 2,160,000.00 | 1,920,000.00 |
| நீர்வரி | 58,289.27 | 49,599.10 |
| பாதுகாப்புக் கட்டணம் | 380,495.89 | 381,541.21 |
| | **3,160,808.22** | **2,828,049.37** |

| (எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது) | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 8 - ஏனைய பயன்பாட்டுச் செலவுகள்** | | |
| பிரயாணம் | - | - |
| பிரயாணம் - கொடுப்பனவு | 360,000.00 | 360,000.00 |
| பிரயாணம் - அலுவலர்கள் | 44,042.00 | 44,217.00 |
| பிரயாணம் - உறுப்பினர்கள் | 92,950.00 | 85,397.00 |
| பிரயாணம் - வெளிநாடு | 141,807.25 | - |
| விளம்பரமும் வெளியீடுகளும் | 133,775.60 | 85,397.00 |
| அச்சிடலும் கட்டுதலும் | 132,537.00 | 152,926.00 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 711,185.96 | 721,422.32 |
| உபசரிப்புச் செலவுகள் | 178,161.00 | 153,510.00 |
| அலுவலக மற்றும் சமய வைபவ செலவுகள் | 56,316.00 | 1,629.00 |
| எழுதி நீக்கப்பட்ட அலுவலக தளபாடம் | - | 2,690.75 |
| கணக்காய்வுக் கட்டணம் | 39,648.00 | 39,648.00 |
| எதிர்பாராத செலவுகள் | 12,086.00 | 22,839.50 |
| வங்கிக் கட்டணங்கள் | 7,039.30 | 12,856.50 |
| வாகன காப்புறுதியும் உத்தரவுப் பத்திரமும் | 183,686.55 | 150,301.65 |
| சட்டம் தொடர்பில் கட்டணம் | 21,600.00 | - |
| இணையத்தள செலவுகள் | - | 90,800.00 |
| நன்கொடை | - | 1,500.00 |
| | **2,114,834.66** | **2,010,531.72** |
| **குறிப்பு 9 - மானியம் மாற்றுதல்** | | |
| மாகாண தொடர்பாடல் கருத்தரங்கு | 1,607,661.33 | 1,439,567.00 |
| டிப்ளோமா பாடநெறி | 457,192.53 | 466,554.24 |
| "தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சி | 1,734,092.81 | 1,828,138.40 |
| வெளியீடுகள் | 347,000.00 | 553,200.00 |
| பயிற்சி நெறி - அலுவலர்கள் | - | 17,500.00 |
| "மீடியா போரம்" 4 ஆவது ஆண்டு விழா | - | 2,169,109.81 |
| | **4,145,946.67** | **6,474,069.45** |
| மொத்தச் செலவுகள் | **19,563,530.78** | **19,909,787.89** |

| *(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது)* | 2014 | 2013 |
|---|---|---|
| | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |
| **குறிப்பு 10 - நிதி மற்றும் நிதி சமநிலை** | | |
| வங்கியிருப்பு | 651,864.64 | 548,010.60 |
| | **651,864.64** | **548,010.60** |
| **குறிப்பு 11 - ஏனைய நடைமுறை சொத்து** | | |
| சம்பள மீளப் பெறுகை | 13,497.25 | 8,268.25 |
| சம்பள மீளப் பெறுகை - தொலைபேசி கட்டணம் | 2,095.46 | - |
| பதிவு மற்றும் பிந்திய கட்டணம் | 2,000.00 | 59,000.00 |
| புத்தக தொகை | 6,370.00 | 13,875.00 |
| | **23,962.71** | **81,143.25** |
| **குறிப்பு 12 - தொகையிருப்பு** | | |
| புத்தக இருப்பு | 381,880.01 | 530,667.65 |
| காகிதாதி இருப்புக்கள் | 105,863.36 | 82,963.08 |
| பொருட்கள் விற்பனை அல்லது திருப்பி அனுப்பும் அடிப்படையில் | 64,486.40 | - |
| | **552,229.77** | **613,630.73** |
| **குறிப்பு 13 - வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்** | | |
| பாதுகாப்பு வைப்புக்கள் - காசல் வீதி கட்டடம் | 540,000.00 | 480,000.00 |
| பாதுகாப்பு வைப்பு - தண்ணீர் போத்தல்கள் | 4,000.00 | 4,000.00 |
| எரிபொருள் வைப்புக்கள் | 75,000.00 | 75,000.00 |
| காப்புறுதி மற்றும் வருமான உத்தரவுப்பத்திரம் | 77,121.73 | 153,490.07 |
| **மொத்தம்** | **696,121.73** | **712,490.07** |
| **குறிப்பு 14 - பெறவேண்டிய இடருதவிக் கடன்கள்** | | |
| வருட ஆரம்பத்தின் மீதி | 1,523,029.50 | 1,511,938.50 |
| வருடத்தில் கொடுக்கப்பட்ட கடன்கள் | 99,920.00 | 546,705.75 |
| வருடத்தில் மீளப்பெறப்பட்ட கடன்கள் | **1,622,949.50** | **2,058,644.25** |
| **வருட இறுதியின் மீதி** | (371,743.50) | (535,614.75) |
| | **1,251,206.00** | **1,523,029.50** |

*(எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது)*

**குறிப்பு 15 - சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம்**

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | அலுவலக நலனோம்பு உபகரணம் | நூலக நூல்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **விலை/ மதிப்பீடு** | | | | | |
| *01.01.2014 அன்று மீதி* | 10,102,680.00 | 1,235,862.75 | 2,002,656.83 | 178,344.48 | 13,519,544.06 |
| **கூட்டுக** | 96,000.00 | 25,656.25 | 903,585.00 | 1,500.00 | 1,026,741.25 |
| *நீக்கப்பட்டவை/எழுதி நீக்கப்பட்டவை* | (197,680.00) | - | - | - | (197,680.00) |
| ***31.12.2014 அன்று மீதி*** | 10,001,000.00 | 1,261,519.00 | 2,906,241.83 | 179,844.48 | 14,348,605.31 |
| **தேய்மானம்** | | | | | |
| *01.01.2014 அன்று மீதி* | 1,958,000.00 | 1,150,552.00 | 922,285.00 | 52,916.62 | 4,083,753.62 |
| **கூட்டுக** | - | - | 267,238.00 | - | 267,238.00 |
| வருடத்திற்காக நீக்கப்பட்டவை | 920,000.00 | 140,226.00 | 341,594.50 | 26,103.27 | 1,427,923.77 |
| | (140,000.00) | (269,638.00) | (44,833.00) | - | (454,471.33) |
| *31.12.2014 அன்று மீதி* | 2,738,000.00 | 1,021,140.00 | 1,486,284.17 | 79,019.89 | 5,349,487.33 |
| **மதிப்பீடு** | | | | | |
| *01.01.2014 அன்று* | 8,144,680.00 | 85,310.75 | 1,080,371.83 | 125,427.86 | 9,435,790.44 |
| *31.12.2014 அன்று* | 7,263,000.00 | 240,379.00 | 1,419,957.66 | 100,824.59 | 8,999,117.98 |

*(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)*

| | 2014 | 2013 |
|---|---|---|
| | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |
| **குறிப்பு 16 - முதலீடு - சேமிப்புக் கணக்கு (நிதி தொடர்பில்)** | | |
| மக்கள் வங்கி - கடன் நிதி | 1,250,203.76 | 824,704.55 |
| மக்கள் வங்கி - ஆய்வு நிதி | 1,212,556.69 | 786,934.31 |
| மக்கள் வங்கி - நன்கொடை நிதி | 676,413.44 | 649,934.22 |
| | **3,139,173.89** | **2,261,573.08** |
| **குறிப்பு 17 - உள்ளபடி செலவுகள்** | | |
| மேலதிக நேரம் | 46,219.06 | 30,427.13 |
| பிரயாணக் கொடுப்பனவு | 400.00 | 1,600.00 |
| தொலைபேசி | 18,973.30 | 4,206.84 |
| கணக்காய்வுக் கட்டணம் | 106,176.00 | 65,528.00 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | - | 4,060.00 |
| பத்திரிகை மற்றும் பருவ வெளியீடுகள் | 1,140.00 | - |
| | **172,908.36** | **106,821.97** |
| **குறிப்பு 18 - ஊழியர் சலுகைகள்** | | |
| வருட ஆரம்பத்தின் மீதி | 3,738,207.00 | 3,334,106.00 |
| வருடத்தில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | - | - |
| வருடத்தின் ஒதுக்கீடு/நீக்கப்பட்டவை | **3,738,207.00** | **3,334,106.00** |
| வருட இறுதியில் மீதி | 540,363.00 | 404,101.00 |
| | **4,278,570.00** | **3,738,207.00** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No } எம் - 1/எப்/எஸ்எல்பீசீ/1/14/27 | ඔබේ අංකය / உமது இல / Your No. } | දිනය / திகதி / Date } 2015, யூலை 14

தலைவர்,
இலங்கை பத்திரிகைப் பேரவை,

**இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம், விரிவான அறிக்கையொன்று பேரவையின் தலைவருக்கு 2015, யூன் 05 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு***

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 ***கணக்காய்வாளரின் பொறுப்பு***

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின்

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும்(4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.4 *முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. *நிதிக்கூற்றுக்கள்*

### 2.1 *முனைப்பழியுள்ள அபிப்பிராயம்*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2014, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 *நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்*

#### 2.2.1 *இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம்*

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09

இருப்பின் பெறுமதி கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இதில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் சபையில் காலாவதியானதும் கிரயத்தை மீள முழுமையாக அறவிட முடியாதுள்ள நிலையில் காணப்படுகின்ற புத்தகங்கள் அவற்றின் கிரயமான ரூபா 381,880 பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07

நிலையான சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் சந்தை தகவல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்களைக் கையேற்கும் போது அவற்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன கணக்காளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமதி மதிப்பிடப்பட்டிருப்பதுடன் வருடாந்தம் சொத்துக்கள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02

நிதி உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் பிரதிபலிக்கப்படும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கீழே காண்பிக்கின்ற சந்தர்ப்பங்களில் அதற்கு முரணாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

i. காசுப்பாய்ச்சல் கூற்றில் காசல்லாத சீராக்கங்களின் கீழ் பதிவழித்தல்களாக ரூபா 35,490 பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான பதிவழித்தலொன்று செயலாற்றல் அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மோட்டார் வாகன மீள் கணிப்பீட்டின் காரணமாக முச்சக்கர வண்டியின் பெறுமதி ரூபா 26,000 இனால் அதிகரித்தமை மற்றும் பேரவையை நடாத்திச்சென்ற நிதியக் கணக்கிற்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டித்தொகையான ரூபா 94,613 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் காரணமாக வெளிப்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் இனங்காணப்பட்டிருந்தது.

#### 2.2.2 *கணக்கீட்டுக் கொள்கை*

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) பேரவையின் பெறுமானத்தேய்வுக் கொள்கை 2013 ஆம் ஆண்டின் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி, சொத்துக்களை பாவனைக்கு எடுத்த திகதி முதல் பெறுமானத்தேய்வுக் கணிப்பிடும் அடிப்படையில் மாற்றப்பட்டிருந்த போதிலும் இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் பெறுமானத்தேய்வுக் கொள்கை அதன்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனச் செலவினத்திற்காக அரசாங்கத்தின் பங்களிப்புக் கணக்கு வைத்தலுக்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று பேரவையால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 *கணக்கீட்டுக் குறைபாடுகள்*

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 03 விடயங்களுக்குரிய ஒப்பீட்டுத் தகவல்கள் ரூபா 8,268 இனால் மாற்றப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக பணிக்கொடைப் படிக்கான ஒதுக்கீடுகள் ரூபா 136,152 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை*

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2010 மே 14 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்தின் சீஏ/1/17/1 ஆம் இலக்க கடிதத்தின் 1 ஆம் பந்தி | அமைச்சு மற்றும் அதன் கீழ் பேணப்படுகின்ற சகல நிறுவனங்களிலும் இயலுமான வரையில் அரசாங்கத்தினதும் அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் நடாத்தப்பட வேண்டியதை அறிவித்தல் மற்றும் 2012 யூலை 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளை இலக்கம் 7 இன் படி பேரவையின் அலுவலகத்தை அரசாங்கத்தின் கட்டிடமொன்றுக்கு கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்ட கட்டளையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் பல்வேறு இடங்களில் வாடகை அடிப்படையில் அலுவலகம் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது. 2006 முதல் 2014 ஆம் ஆண்டு வரை மாத்திரம் வாடகையாக ரூபா 11,570,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2014 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 20,000 இனால் உயர்வடைந்திருந்தது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை உரிய காலாண்டு முடிவடைந்து 30 நாட்கள் கடப்பதற்கு முன்னர் உரிய வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக் கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டில் சகல காலாண்டு ரீதியான அறிக்கை குறிப்பிடப்பட்ட காலத்தில் உரிய வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாண இலக்கம் 880 | அரசாங்கத்தின் பணத்தைக் கையேற்றல் அல்லது பொறுப்பில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள், அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய உறுதிச்சீட்டுக் களை உறுதிப்படுத்துகின்ற மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள், பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் பேரவையில் அவ்வாறான கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து இது வரையிலும் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாண இலக்கம் 102 மற்றும் 108 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி தொலைந்துபோன அல்லது பயன்படுத்த முடியாதுள்ள நான்கு விடயங்கள் இனங்காணப்பட் டிருந்தும் அது தொடர்பாக உரிய பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாண இலக்கம் 245 | நிறுவனத்தின் உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்தும்போது உறுதிப்படுத் துகின்ற உத்தியோகத்தரினால் சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் நடப்பாண்டில் செத்தெம்பர் மாதத்தின் போது கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரக் கையளித்த லின்றி உதவி ஆணையாளரினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப் படுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.3(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | நியதிச்சட்டமொன்றல்லாத நிதியத்தைப் பேணிச் செல்வது அரசாங்க நிதிக் கட்டுப்பாடு தொடர்பான பொறுப்புக்கள் நலிவானதாகையால் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நியதிச்சட்ட நிதியங்களும் கலைக்கப்பட்டு அவைகளின் மீதிகள் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,139,174 பெறுமதியையுடைய நிதியத்தின் மூன்று கணக்குகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பேரவையிடம் காணப்பட்டது. மேலும் இதற்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

3. **நிதி மீளாய்வு**

3.1 ***நிதி விளைவுகள்***

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014, திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 1,490,967 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,795,205 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 304,238 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் மானியம் முன்னைய ஆண்டை விட ரூபா 713,750 இனால் குறைவடைந்த போதிலும் பேரவையின் ஏனைய வருமானம் ரூபா 616,248 இனால் அதிகரித்தமை மற்றும் மீண்டெழும் செலவினம் ரூபா 401,740 இனால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

4. ***செயற்பாட்டு மீளாய்வு***

4.1 ***செயலாற்றல்***

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) மீளாய்வாண்டின்போது செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக 55 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத 44 முறைப்பாடுகளுடன் தீர்ப்பதற்கிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 99 ஆகும். அதில் 34 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கின் அடிப்படையில் முறைப்பாடு தீர்த்தலின் செயல்முன்னேற்றம் 55 சதவீதம் மாத்திரமாக இருந்த போதிலும் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2 மில்லியன் முழுத்தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 60 இணையத் தளங்களைப் பதிவு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் மாதம் வரையிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மாவட்ட பிராந்திய ஊடகத்திலும் பாடசாலை வெகுசன ஊடகத்திலும் 13 செயலமர்வுகளை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டு ரூபா 1,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 08 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்துவதற்காக ரூபா 1,607,661 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) மிகவும் உயர் தகைமையுள்ள பொது சன ஊடகத்தை ஏற்படுத்துவதற்காக 05 வெவ்வேறு வகைப்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு நூல்களை அச்சிடுவதற்காகவும் விடய ஒருங்கிணைப்புடன் விவாதமொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

4.2 ***முகாமைத்துவ செயற்திறனின்மை***

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பத்திரிகைப் பேரவையால் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நான்கு ஊடகத்துறை டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் முகாமைத்துவ நலிவுகளைக் காணக்கூடியதாக இருந்தன.

(i) நான்கு பாடநெறிகளுக்காக செய்யப்பட்ட மொத்தச் செலவினம் 2015, மார்ச் 31 ஆந் திகதி வரை ரூபா 2,827,501 ஆக இருந்ததுடன் பாடநெறிக்காக அறவிடப்பட்ட மொத்தக் கட்டணம் ரூபா 1,130,000 ஆனமையால் பேரவையின் நிதியத்தில் ரூபா 1,697,501 தொகையான மேலதிக கிரயமொன்றைச் செலவிட நேர்ந்திருந்தது. அதன்படி 2012 நவம்பர் 05 ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின்போது வழங்கப்பட்ட ஆலோசனையின் படி பாடநெறிச் செலவினத்தை தீர்த்துக்கொள்வதற்கு முடியுமான வகையில் கட்டணங்கள் திருத்தப்பட்டிருந்த போதிலும் அதில் பாடநெறிக்காக ஏற்படுகின்ற செலவினம் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ii) கடந்த நான்கு வருட காலத்தில் இந்தப் பாடநெறிக்காக பதிவு செய்திருந்த மாணவர்களில் பாடநெறிகளை விட்டுச்சென்ற வீதம் 50 சதவீதமான அளவிலாக இருந்தது. இவ்வாறு பாடநெறிகளை விட்டுச் சென்ற சதவீதம் அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாடநெறி ஒழுங் கமைப்பாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(iii) மீளாய்வாண்டில் நடைபெற்ற 08 ஊடகவியலாளர் செயலமர்வுகள் மற்றும் பாடசாலை ஊடாக செயலமர்வுகளில் 3 செயலமர்வுகள் குருநாகல் மாவட்டத்தை மேவுகை செய்யும் வகையில் நடாத்தப்பட்டிருந்தன. அதற்கு முன்னைய ஆண்டின்போதும் செயலமர்விற்காக மாவட்டமொன்றைத் தெரிவு செய்யும்போது இவ்வாறான பாகுபாடான நிலைமையொன்று அவதானிக்கப்பட்டமையால் செயலமர்வுகளை நடாத்தும்போது பதிவு செய்த பாடசாலை ஊடகச் சங்கம் உள்ள ஏனைய பாடசாலைகள் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தா திருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தினால் ஊடகம் தொடர்பான நூல்கள் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுவதுடன் ரூபா 381,880 கிரயமான புத்தக இருப்பொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பேரவையில் இருந்தது. அதனிடையே ரூபா 84,216 கிரயமான 1318 புத்தகங்கள் அச்சகத்தில் 14 வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்டதுடன் ரூபா 64,486 கிரயமான 480 புத்தகங்கள் விற்பனையின்றேல் திருப்புக அடிப்படையில் 30 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையிலான உயர்ந்த கழிவின் கீழ் புத்தகசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட தேவை அல்லது விற்பனை செய்யக்கூடிய இயலுமை இனங்காணப்படாமல் புத்தகங்களை அச்சிடல் மற்றும் புத்தகங்களை விற்பனை செய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உரிய வேலைத்திட்டம் காணப்படாமை இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்தது.

4.3 ***சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்***

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) 1993 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போது காணப்பட்ட ஆராய்ச்சி நிதியக் கணக்கின் நோக்கங்களின் படி சந்தாதாரர் மெய்மையாய்விற்காக முழுமையான செலவுகளும் நிதியத்தின் மூலம் செய்யப்பட வேண்டிய போதிலும் மெய்மையாய்வுச் செலவினம் மீண்டெழும் மானியத்திலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதற்காக செலவிட்ட பணம் 3,75,000 ரூபா வாக இருந்ததுடன் இக்கொடுப்பனவிற்காக போதியளவு நிதியம் இக்கணக்கில் காணப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற சகல செயலமர்வுகளுக்காகவும் 1,000 உத்தியோகத்தர்களுக்காக உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக 4,03,392 ரூபா தொகைகளில் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செயலமர்விற்காக பங்குபற்றியவர்கள் 679 மாத்திரம் என அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டமையால் 1,29,489 ரூபா செலவிடப்பட்டமை கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது.

4.4 ***சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்***

மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வொன்றை நடாத்துவதை நோக்கமாகக் கொண்டு அதன் பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக பேரவையினால் 13,475 ரூபா தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது வரை அவ்வாறான செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

4.5 ***பதவியணியினர் நிருவாகம்***

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம், அதில் நிறைவேற்று உத்தியோகத்தரான பத்திரிகை ஆணையாளர் பதவியின் நடவடிக்கைகள் 2010, மார்ச் 31 ஆந் திகதி முதல் அமைச்சரவை ஆலோசனையின் பிரகாரம் அவ்வப்போது அமைச்சின் சிபாரிசின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பதிற்கடமை அடிப்படையில் மேவுகை செய்யப்பட்டிருந்தது. முழு நேர உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டிய இந்தப் பதவிக்காக நிரந்தரமாக நபரொருவரை நியமிப்பதற்கு 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவிலும் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் இப்பதவிக்காக நிரந்தர நபரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையின் வெற்றிடமாகக் காணப்பட்ட 9 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு 102,144 ரூபா தொகை செலவிட்டு 2013, ஒற்றோபர் 05 ஆந் திகதி செய்திப்பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் பதவிகளுக்காக நபர்களைச் சேர்ப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரைச் சேர்க்காமையின் காரணமாக நாளாந்தக் கொடுப்பனவு செலுத்தும் அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சம்பளமாக 1,87,000 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது.

5. ***கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்***

5.1 ***நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்***

2003, யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் பத்திரிகைப் பேரவையின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015, மே 18 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

5.2 ***கூட்டிணைந்த திட்டம்***

2003, யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் பேரவையால் 2010 - 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில இலக்குகள் ஐந்து வருடங்கள் முடிவடையும் வரையிலும் நிறைவேற்றுவதற்கு பேரவை தவறியிருந்தது.

5.3 ***செயல்நடவடிக்கைத் திட்டம்***

2014 ஆம் ஆண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014, திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் படி அதில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

5.4 ***உள்ளகக் கணக்காய்வு***

பேரவையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன் பேரவையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.5 ***கணக்காய்வுக் குழு***

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம், ஆகக் குறைந்த காலாண்டிற்கு ஒன்று வீதம் 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 2 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

5.6 ***கொள்வனவுத் திட்டம்***

2006, சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கை 8 ஆம் இலக்கத்தின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக 2014, பெப்புருவரி 20 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அது அமைச்சின் அங்கீகாரத்திற்காக 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்வனவுத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

(i) அந்தந்தக் காலத்தில் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட விடயங்களின் அளவு மற்றும் கிரயங்கள் தனித் தனியாக இனங்காண முடியாமை.

(ii) ஒவ்வொரு விடயத்தினதும் தேவையின் அடிப்படையில் கொள்வனவு ஆரம்பிக்கப்படுகின்ற திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

5.7 ***பாதீட்டுக் கட்டுப்பாடு***

பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே போதியளவான முரண்கள் அவதானிக்கப் பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.8 ***தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்***

இலங்கை பத்திரிகைப் பேரவை தொடர்பாக 2014, யூலை 24 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது வழங்கப்பட்ட கட்டளைகள் அதாவது, 2010 - 2014 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் காலரீதியாக நாளது வரையாக்குதல், உள்ளகக் கணக்காய்வை அமுல்படுத்துதல், கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பித்தல் முறையான பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல், பேரவையின் மேற்கூறப்பட்ட துறைகளில் வெற்றிடமுள்ள பதவிகளுக்காக நபர்களை நியமித்தல் மற்றும் பதிவு செய்யப்படாத பத்திரிகை மற்றும் நாளிதழ்களைப் பதிவு செய்வதற்காக முறையான பொறிமுறையொன்றைத் தயாரித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

5.9 ***சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்கள்***

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :

(அ) அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவு மற்றும் 30(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பொய்யானவைகள், அபகீர்த்தி மற்றும் பண்பாடற்ற கூற்றுக்கள் தொடர்பாக கண்டறிந்த குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்காக பேரவையில் பேணப்பட்ட பொறிமுறை போதியளவில் காணப்படாதிருந்ததுடன் அவ்வாறான நாளிதழ்கள் பதிவுசெய்யப்பட்டு நாளிதழ்களாக விற்பனை செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பேரவைக்கு அறிக்கையிடப் பட்டிருந்த போதிலும் பேரவையால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி சகல பத்திரிகைகளும் பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பதிவு செய்யப்படாது, சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக பேரவையின் நடவடிக்கைகளுக்கு தாக்கமளிக்கும் விடயமாகக் கருதி தேவையான சட்ட விதிகளை தயாரித்துக் கொள்ள பணிப்பாளர் சபைக்கு அதிகாரச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி அதிகாரம் காணப்பட்ட போதிலும், இதற்காக முறையான பொறிமுறையொன்று இது வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தினந்தோறும் பிரசுரிக்கப்படுகின்ற பத்திரிகைகளைப் புலனாய்வு செய்து பார்ப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப் படாதிருந்ததுடன் பேரவையில் புலனாய்வு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையின் அளவு 2013 ஆம் ஆண்டில் 8 ஆக இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது அது 3 வரை கீழிறங்கியிருந்தது. அதன் படி பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுதல் தொடர்பான மதிப்பீட்டிற்காக பேரவையினால் போதியளவில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பேரவை அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவு மற்றும் ஒழுக்கக் கோவையின் 6 ஆம் பிரிவை மீறும் வகையில் குற்றங்களை மாத்திரம் அறிக்கையிடப்பட்ட பத்திரிகைகளைப் பதிவு செய்வதற்காக எவ்வித அடிப்படையுமின்றி பேரவை அனுமதி வழங்கியிருந்தது.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது:

(அ) கொள்வனவுகள்
(ஆ) பதிவேடுகளைப் பேணுதல்
(இ) பாடநெறிகளை நடாத்துதல்

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்).